Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 10, 2023

வெள்ளிக்கிழமை மார்ச் 10, 2023 | ஒளி: 08 கதிர்: 226 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## 7 வகை பொருட்களின் விலைகள் குறைந்தன



ஏழு வகையான அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைக்க லங்கா சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த விலை குறைப்பு நேற்று (09) நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது.

காய்ந்த மிளகாய் ஒரு கிலோ கிராம் 1,500 ரூபாய்

கோதுமை மாவு ஒரு கிலோ கிராம் 230 ரூபாய்

பருப்பு ஒரு கிலோ கிராம் 339 ரூபாய்

வெள்ளை சீனி ஒரு கிலோ கிராம் 218 ரூபாய்

வெள்ளை பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் 155 ரூபாய்

வெள்ளை நாடு ஒரு கிலோ கிராம் 188 ரூபாய்

பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராம் 129 ரூபாய்



## சடா முடியுடன் முன்னாள் போராளி மீட்கப்பட்டார்

வசந்தி

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளில் ஒருவர், நடு காட்டில் இருந்து சடா முடியுடன் மீட்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட தாந்தாமலைக் காட்டுப் பகுயிலிருந்து முன்னாள் போராளி ஒருவர் புதன்கிழமை (08.03.2023) மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 4 வருடங்களாக குடும்பத்தினரால் கைவிடப்பட்ட, முன்னாள் போராளியான மனநலம் குன்றிய `பாலா` என்பவர் தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள றெட்பாணா எனும் கிராமத்திற்கு அப்பாலுள்ள காட்டுப்பகுதியில் தூர்ந்துபோன கொட்டகை ஒன்றில் வசித்து வந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 25 தேர்தல் நடந்தாலும் 24 இலே ஆரம்பமாகும்



உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி இடம்பெற்றாலும் அதில் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிக் காலம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியில் இருந்து தான் ஆரம்பமாகும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான முதல்நாள் விவாதத்தில் உறையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் தற்போது கருத்துரைக்கும் எதிர்தரப்பினர் தான் 2018 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போடுவதற்கு துணைபோனார்கள் என்றார்.

தொடர்ச்சி P2

# ஜோசப் முகாம் தளபதிக்கு தடை விதிக்கவும்

### ஐ.நா மனித உரிமைகள் குழுவிடம் ' ICPPG' கோரிக்கை




இலங்கையின் மனித உரிமைகள் பதிவின் தற்போதைய மீளாய்வுக்கான அரசாங்கத் தூதுக்குழுவில் குற்றம் சாட்டப்பட்ட `மேஜர் ஜெனரல் ஜீவக ருவான் குலதுங்க` பங்கேற்பதை நிறுத்துமாறு இனப்படுகொலை தடுப்பு மற்றும் வழக்கு விசாரணைக்கான சர்வதேச மையம் ( ICPPG) ஐ.நா மனித உரிமைகள் குழுவிடம் வேண்டுகோள்

தற்போதைய இலங்கைக்கான மனித உரிமைகள் அமர்வில் போர்க்குற்றவாளியாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மேஜர் ஜெனரல் ஜீவக ருவான் குலதுங்க பங்கேற்பதைத் தடை செய்யக்கோரி ஐ.நா மனித உரிமைகள் குழுவிடம் 'ICPPG' வேண்டுகோள் விடுத்துள்ளது. தொடர்ச்சி P2

## நிதியை மறுத்தால் நீதியை அவமதித்ததாக செல்வோம்



"உள்ளூராட்மன்றத் தேர்தலுக்கான நிதியை வழங்குவதற்கு தொடர்ந்தும் நிதி அமைச்சு மறுக்குமாக இருந்தால் நீதிமன்றத்தை அவமதித்தமை குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்றத்தை மீண்டும் நாடுவோம்" என ஐக்கிய மக்கள் சக்தி செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) வியாழக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்துக்கான பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் சவால் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "ரணிலின் உருண்டைகளை சாப்பிட்டுவிட வேண்டாம்"



அடுத்த வருடத்தின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கப்போவதில்லை. இதனால் இப்போது நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்பவர்கள் புதிய அரசாங்கத்தின் போது சிறைக்கு செல்ல நேரிடும் என்பதனை புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) வியாழக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே இதனை தெரிவித்தார்.

"தேர்தல் நடத்துவதற்கு பணம் இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் மின்சார கட்டண அதிகரிப்பு, வரி அதிகரிப்பு உள்ளிட்டவற்றில் கிடைத்த வருமானம் எங்கே? இப்போது டொலர் இருந்தாலும் ரூபாய் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது" என்றார்.

தொடர்ச்சி P2

## பயங்கரவாதிகள் என்றால் பாதையே மாறி விடும்



அஹிம்சை வழியில் போராடும் மாணவர்களைப் பயங்கரவாதிகளாக இந்த அரசாங்கம் சித்திரிக்குமாக இருந்தால், அவர்களின் பாதை மாறக்கூடிய சூழல் ஏற்பட்டு விடுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம் எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான முதல்நாள் விவாதத்தில் உறையாற்றும்போதே இவ்வாறு எச்சரித்த அவர் மேலும் கூறுகையில், ஒரு ஜனநாயக நாட்டில் ஜனநாயகம் மரணிக்காது உயர்த்துடிப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கும் குறிகாட்டியே தேர்தல். அதாவது மக்களுக்கான வாக்குரிமை. மக்களது விருப்புக்கு மாறாக அரசியலமைப்புக்கு முரணாக நமது நாட்டில் நடைபெற வேண்டிய தேர்தல்கள் அனைத்தும் அரசாங்கம் தோல்வியடைந்து விடுவோமா என்ற காரணத்துக்காக ஒத்திவைக்கப்படுகின்றன இதுவே எமது நாட்டின் ஜனநாயன பெருமை.

நேற்றும் நேற்று முன்தினமும் பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் மீது அரச படையினர் , குண்டர் படையினர் திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்தினார்கள்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் எதிராகவும் பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிராகவும் மாணவர்கள் இன்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை அரசு பயங்கரவாதிகள் என சொல்லுகின்றது. அரசியல் கட்சிகளின் பயங்கரவாதிகள் என கூறுகின்றார்கள்.

அஹிம்சை வழியில் பேராடுபவர்களை நீங்கள் பயங்கரவாதிகள் என கூறினால் அவர்களின் பாதை மாறக்கூடிய சூழல் ஏற்பட்டு விடும் என்றார்.

## துப்பாக்கி திருடிய பிக்கு சிக்கினார்

'பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவ வீரரை ஏமாற்றி, அவரிடமிருந்த ரி.-56ரக துப்பாக்கி, அதற்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் மற்றும் மெகசின் ஆகியவற்றை திருடினர்' என்றக் குற்றச்சாட்டின் கீழ், பௌத்த பிக்குவும் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'பனாகொட இராணுவ முகாமை அண்டிய சோதனைச் சாவடியில் இருந்து T-56 துப்பாக்கி திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்' என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பிக்கு ஹோமாகம, கொடகம பிரதேசத்தில் உள்ள விஹாரை ஒன்றில் தங்கியிருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பனாகொட இராணுவ முகாமை அண்டிய இராணுவ குடியிருப்பு வளாகத்தின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட இராணுவத்தை ஏமாற்றி கடந்த 3 ஆம் திகதி இரவு இவரிடம் இருந்து T 56 துப்பாக்கி, 4 மகசின்கள், 120 தோட்டாக்கள் மற்றும் பாதுகாப்புப் பை என்பன திருடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பண மோசடி: 24 பேர் கைது

வெளிநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி, பலரிடம் பெரும் தொகையில் பண மோசடியில் ஈடுபட்டனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் 24 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமையும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவினால் ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாதங்களிலும் சுமார் 173 முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், முறைப்பாட்டாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்த பணம் 126 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## உருளைக் கிழங்கு மீதான தீர்வை அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்குக்கான விசேட பண்ட தீர்வை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மீதான புதிய வரி கிலோ கிராம் ஒன்றுக்கு 50 ரூபாயாக அறவிடப்படும். அத்துடன், இந்த புதிய தீர்வை ஆறு மாதங்களுக்கு அமுலில் இருக்கும்.

தொடர்ச்சி P2

## தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது

"தனிப்பட்ட ஒருவரின் நிலைப்பாட்டுக்காக அரசியலமைப்பை மீறுவதை அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேர்தல் "எப்போது நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது" என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

கீழ் மட்ட ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் முக்கிய இடமே உள்ளூராட்சி சபைகள்.



தொடர்ச்சி P2

## தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ச்சியாக போராடுவோம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எச்சரிக்கை

நிதர்ஷன் வினோத்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம் (09) முன்னெடுக்கப்பட்டது.

"பல்கலைக்கழக கல்வி சாரா பணியாளர்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும்", "மின்சாரம் எரிபொருள் எரிவாயு பொருட்களின் விலைகளைக் குறை", "நியாயமற்ற வரிக் கொள்கையை உடனடியாக திருத்து", "சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் குழுவின் அறிக்கையினை உடனடியாக நடைமுறைப்படுத்து", "அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீளவும் திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்து", "பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன்?" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள் மார்ச் 15ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ச்சியாகப் போராட்டம் இடம்பெறும் என்றனர்.

# சடா முடியுடன் முன்னாள் போராளி மீட்கப்பட்டார்



இச்சம்பவம் தொடர்பில் தற்போது தகவலறிந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், மற்றும் அவரது சக முன்னாள் போராளிகளும் அவரை அணுகியுள்ளனர். இவர்களைக் கண்டதும் பாலா கட்டுப் பகுதிக்குள் மறைந்து விடுவார். பின்னர் அவரை தொடர்ந்து இரவு பகலாக அவதானித்து வந்துள்ளனர்.

பின்னர் அவரது உறவினர்கள், மற்றும் அப்பகுதி கிராம சேவைகர் ஆகியோரது உதவியுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உதவியுடன், உரிய இடத்திற்கே நோய்காவு வண்டி வரவழைக்கப்பட்டு அதில் ஏற்றி, சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

"இதுவரை காலமும் காட்டிலுள்ள பழங்களை உண்டு கொண்டு, குளிக்காமல், முடிவெட்டாமல், சுகாதார சீர்கேடான முறையில் அவர் வாழ்ந்து வந்துள்ளார். நாம் அவருக்கு புதிக ஆடைகளை மாற்றி வைத்தியசாலையிலிருந்து அவரைக் கவனித்துக் கொள்வதற்காகவும், மேலும் ஒருவரையும் அனுப்பி வைத்துள்ளோம்" என ஜனநாயக் போராளிகள் கட்சியைச் சேர்ந்த நகுலேஸ் தெரிவித்தார்.

# ஜோசப் முகாம் தளபதிக்கு தடை விதிக்கவும்

## ஐ.நா மனித உரிமைகள் குழுவிடம் ' ICPPG' கோரிக்கை

அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சித்திரவதைக்குள்ளானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தங்களைப் போன்ற சர்வதேச அரசு சார்பற்ற மனித உரிமைகள் அமைப்புக்களிற்கு மிகுந்த கவலையளிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ஆம் திகதி முதல் 2017 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி வரை குலதுங்க, ஜோசப் முகாம் (SFHQ-W) தளபதியாக இருந்தார். இந்த காலகட்டத்தில் ஜோசப் முகாமில் சித்திரவதைக்கு ஆளான பலர் பிரித்தானியா மற்றும் உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்றனர்.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ICPPG, அவர் பங்கேற்பதை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கிறது. 2016 இல் குலதுங்கவின் முன்னோடியான சிசிர மெண்டிஸ் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா குழுவிற்கு அனுப்பப்பட்ட போது பெலிஸ் கெயர் செய்ததைப் போல குறைந்தது அவரது பங்கு பற்றி அவரிடம் வினா எழுப்புமாறு ஐ.நா மனித உரிமைகள் குழுவை கோரியுள்ளதுடன் முன்னாள், தற்போதைய மற்றும் எதிர்கால குற்றவாளிகளுக்கு ஒரு தீவிரமான செய்தியை அனுப்புமாறும் கோரியுள்ளது. இது மற்றவர்கள் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

'ICPPG' பணிப்பாளர் திருமதி அம்பிகை செல்வகுமார், குற்றஞ்சாட்டப்பட்ட மேஜர் ஜெனரல் குலதுங்க பங்கேற்பதை நிறுத்துமாறு அனைத்து புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் மற்றும் பிற மனித உரிமைகள் அமைப்புகளை ஒன்றிணைத்து ஐ.நாவை வலியுறுத்துமாறு அழைப்பு விடுத்ததுடன் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமையை மீளாய்வு செய்வதற்கு எவ்வாறு ஐ.நா போர்க்குற்றவாளியை அனுமதிக்க முடியும்?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# 25 தேர்தல் நடந்தாலும் 24 இலே ஆரம்பமாகும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல அவர் பாராளுமன்றத்தின் 134 உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டவர் ஆகவே, அவர் எவ்வாறு நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்த முடியும் என கேட்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதை தொடர்பில் டி.பி. விஜேதுங்க பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்,அவர் நிறைவேற்றுத்துறை அதிகாரத்தை பயன்படுத்தி யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தார்,ஆகவே ஜனாதிபதி பதவி விவகாரத்தில் மக்களால் தெரிவு,பாராளுமன்ற தெரிவு என வேறுபாடுகள் கிடையாது என்றார்.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் 134 உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டவர்**

# நிதியை மறுத்தால் நீதியை அவமதித்ததாக செல்வோம்



மக்களின் வாக்குகளால் தெரிவாகும் நான்கு நிறுவனங்கள் உள்ளன. ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் உள்ளன. ஏற்கெனவே மாகாண சபைகள் தேர்தல் நான்கு வருடங்களாக நடத்தப்படாதுள்ளது. அத்துடன் இம்மாதத்தில் உள்ளூராட்சி சபைகளை நியமிக்க வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இல்லை. அரசியலமைப்பு ரீதியில் நியமிக்கப்பட்டவரே இருக்கின்றார். இதன்படி இப்போது மூன்று நிறுவனங்களுக்கான தேர்தல் நடத்தப்படாது இருக்கின்றன. அத்துடன் இந்த பாராளுமன்றமும் இப்போது மக்கள் ஆணையை இழந்துள்ளது என்றார்.

**ஏற்கெனவே மாகாண சபைகள் தேர்தல் நான்கு வருடங்களாக நடத்தப்படாதுள்ளது. அத்துடன் இம்மாதத்தில் உள்ளூராட்சி சபைகளை நியமிக்க வேண்டும்**

# ரணிலின் உருண்டைகளை சாப்பிடவிட வேண்டாம்



"இனி புதிய நாடகமொன்றை அரங்கேற்றுவர். பொருட்களின் விலைகளை குறைப்பர். இதனால் மக்களுக்கு பொருட்களில் சிறிய சேமிப்பு இருந்தாலும் மின்சாரக் கட்டணங்கள் உள்ளிட்ட மற்றையவற்றில் இழப்பே இருக்கும். இப்போது கடனை வாங்கிக்கொண்டு நாங்கள் நிதியில் பலமாக இருக்கின்றோம்" என்று கூறும் நிலைமையே உள்ளது என்றார்.

"இன்று மக்கள் மருந்து இன்றி அவதிப்படுகின்றனர். சர்வதேச நிறுவனங்கள் மருந்துக்கு உதவி செய்தனவே. எங்கே அந்த மருந்துகள். நீங்கள் வேலைக்காரர்கள் என்றால் மருந்தை கொண்டு வாருங்கள். ரணில் வழங்கும் உருண்டைகளை சாப்பிட வேண்டாமென அரச ஊழியர்களுக்கும் இதனை கூறுகின்றோம். புதிய அரசாங்கத்தின் கீழ் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக ரணில், சிறைக்குச் செல்ல நேரிடும் "என்றார்.

# தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது

அதனைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும். இப்போதும் மாகாண சபைகள் செயற்படாத நேரத்தில், அவை நிறைவேற்று கரங்களுக்குள் இருக்கும் நேரத்தில், உள்ளூராட்சி தேர்தலையும் நடத்தாது இருப்பது ஜனநாயகத்தைச் சீர்குலைப்பதாகவே பார்க்கின்றோம் என்றார்.

உள்ளூராட்சி சபைகள் தேர்தலை நடத்துவதை தடுக்க இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளைப் பார்க்கும் போது அவை ஜனநாயகத்துக்கான அடியாகவே உள்ளன. உள்ளூராட்சி சபைகள் மூலம் மக்களுக்கு சேவைகள் கிடைக்கின்றன. 4 வருடங்களுக்காக அவை செயற்படுகின்றன. ஒருவருடத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை அதிகாரித்தாலும் அதன் பின்னர் நீடிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.



# துப்பாக்கி திருடிய பிக்கு சிக்கினார்

திருடப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு பக்க சாலையில் உள்ள ஒரு கற்குகையின் கீழ் 30 தோட்டாக்கள் அடங்கிய ஒரு மெகசினைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அதன்பின்னர் அருகில் உள்ள கடையொன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமெரா மூலம் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

**விசாரணைகளுக்காகப் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்**

# வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பண மோசடி: 24 பேர் கைது

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டவிரோத நிறுவனங்கள் மற்றும் முகவர்களிடம் பணம் வழங்குவதைத் தவிர்க்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறான நபர்கள் தொடர்பில் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பினை ஏற்படுத்தி தகவல்களை வழங்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

# உருளைக் கிழங்கு மீதான தீர்வை அதிகரிப்பு

ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு, அண்மைக்கால அபிவிருத்திகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கவும், விலை ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கே இடைக்காலத் தடை

உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவால் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது, ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கே உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை பிறப்பித்துள்ளது என சுயாதீன எதிரணி எம்.பி. டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அரசாங்கத்தின்ன் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என குறிப்பிடுவது நகைப்புக்குரியது.நாட்டு மக்கள் மாத்திரமா அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்?அரசாங்கம் அர்ப் பணிப்புடனும்,விட்டுக்கொடுப்புடன் செயற்படக் கூடாதா?

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை,அமைச்சுக்க ளுக்கான வரபிரசாதங்களும் மட்டு ப்படுத்தப்படவில்லை,இவ்வாறான பின்னணியின் தேசிய சபை தொடர்பில் தற்போது பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா,இல்லையா என்பதை அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் தேர்தலை நடத்த வேண்டும்

தேர்தல் ஒன்று இடம்பெற்றால் ஒன்று எதிர்க்கட்சி வெற்றிப்பெறும்,அல்லது ஆளும் கட்சி வெற்றிப்பெறும்,தற்போதைய நிலையில் நாட்டில் எந்த தேர்தல் இடம்பெற்றாலும் முதல் மூன்று நிலைகளை எதிர்க்கட்சிகள் கைப்பற்றும்,நான்காவது நிலையை அரசாங்கம் கைப்பற்றும் என ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் கருத்துக்கணிப்பு மதிப்பீட்டை வெளியிட்டுள்ளன.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்புக்கான தடையை உயர்நீதிமன்றம் நீக்கியுள்ளதால் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பின் உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்தே பாராளுமன்றத்தில் சிறப்புரிமை தொடர்பான பிரேரணை சமர்ப்பித்துள்ளமை முற்றிலும் தவறு என்றார்.

# உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன்

கொழும்பு பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசித்து படையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு உரிய பணிப்புரை விடுத்துள்ளதாக சபைமுதல்வரும் கல்வியமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கே இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்குள் காணப்படும் உள்ளக பிரச்சினைகளை விடுத்து தற்போது நாட்டின் பொது பிரச்சினைகளுக்காகவே பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்பி புத்திக்க பத்திரண எழுப்பிய கேள்வி க்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

புத்திக பத்திரண எம். பி ,நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டத்தின் போது படையினர் கொழும்பு பல்கலைக்கழகத்திற்குள்ளே பிரவேசித்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டதன் காரணத்தாலேயே ஒருவர் மரணம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தகைய புகழ்மிக்க பல்கலைக்கழகத்துக்குள் படையினர் பிரவேசித்து இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளமை கவலைக்குரியது. அது தொடர்பில் கல்வியமைச்சர் என்ற வகையில் தாங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த போதே அமைச்சர் மேற்படி நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.



# உ/த விடைத்தாள்களை மதிப்பிட உதவுங்கள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் விடைத்தாள்களை மதிப்பிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது, ஆகையால், மாணவர்களின் நலனை கருத்திற் கொண்டு ஆசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் சுசில் பிரேம்ஜயந் கேட்டுக்கொண்டார்.

விடைத்தாள்களை மதிப்பிடும் நடவடிக்கைகளுக்காக 20,000 ஆசிரியர்கள் அவசியமாக உள்ள நிலையில், 16,000 ஆசிரியர்களே இதுவரை அதற்காக பதிவு செய்துள்ளனர். மேலும் 4,000 ஆசிரியர்களுக்கான குறைபாடு நிலவுகின்றது என்றார்.



பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சி எம்பி புத்திக பத்திரண எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்த கல்வி அமைச்சர் மேலும் கூறுகையில், அவர்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் பிரச்சினைகள் காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு இறுதி மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு வழமையாக வழங்கப்படும் கொடுப்பனவிலிருந்து சுமார் இரண்டு மடங்காக வழங்குவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.



# அரச வன்முறையில் உத்தியோகத்தர் மரணம்

கொழும்பு பல்கலைகழகத்துக்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது பொலிஸார் நடத்திய கண்ணீர்ப்புகை தாக்குதல் சம்பவத்தில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதாச சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை தெரிவித்தார்.

**“ ரோயல் கல்லூரியின் பழைய மாணவராக ஜனாதிபதி இருக்கின்றார். அவரின் பாடசாலை மாணவர்களுக்கும் கண்ணீர்புகை தாக்குதல்களை நடத்தியுள்ளனர்**

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,அரசாங்கம் அரச வன்முறை மற்றும் மிலேசத்தனத்தை பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்கின்றது. கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதன்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய தனியார் பாதுகாப்பு நிறுவனத்தை சேர்ந்த நொச்சியாகமவை சேர்ந்த பிரியந்த வன்னிநாயக்க மரணித்துள்ளார்.

அதேபோன்று இதற்கு முன்னர் ஜே.வி.பியின் நிவித்திகலவை சேர்ந்த ஒருவரும் உயிரிழந்திருந்தார். இதேவேளை ரோயல் கல்லூரியின் பழைய மாணவராக ஜனாதிபதி இருக்கின்றார். அவரின் பாடசாலை மாணவர்களுக்கும் கண்ணீர்புகை தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்றார்.

# கண்காணிப்பு மையம் அமைக்கப்படும்

நாட்டில் பயன்பாட்டில் உள்ள அனைத்து பல நாள் மீன்பிடி படகுகளுக்கும் “படகுகள் கண்காணிப்பு செயல்முறை” (*VMS - Vessel Monitoring System*) வி. எம். எஸ் செய்மதி தொழில்நுட்ப கருவிகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த வருட இறுதிக்குள் 4,200 படகுகளுக்கு வி. எம். எஸ் கருவி பொருத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் அரச தரப்பு எம்.பி திருமதி கோகிலா குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது பயன்பாட்டில் உள்ள பல நாள் மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும் அவற்றில் செய்மதி தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டுள்ள படகுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும் கோகிலா குணவர்தன எம்.பி கேட்டிருந்தார்.



இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டில் தற்போது 5,000 பல நாள் மீன்பிடிப் படகுகள் பாவனையில் உள்ளன. அவற்றில் 3,700 படகுகளுக்கு தொழில்நுட்ப வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கான கருத்திட்டத்தின் மூலம் 4,200படகுகளுக்கு வி. எம். எஸ் கருவிகள் பொருத்தப்படவுள்ளதுடன் அதில் 3,075 படகுகளுக்கு அதனைப் பொருத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் படகுகளை கண்காணிப்பதற்கான கண்காணிப்பு மையம் ஒன்றை அமைப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

# சவால்களை கூறுகின்றோம்

தேர்தலுக்கான நிதியை வழங்க முடியாது என்று நிதி அமைச்சு கூறவில்லை என்றும், ஆனால் தற்போதைய நிலைமையில் நிதியை வழங்குவதில் காணப்படும் சவால்கள் தொடர்பிலேயே கூறுகின்றோம் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், தேர்தல் வேண்டாம் என்று நிதி அமைச்சோ, திறைசேரியோ தீர்மானிக்கவில்லை. தற்போதைய சவால்கள் தொடர்பில் ஆராய்ந்தே கதைக்கின்றோம். வருமானத்திற்கும் செலவுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. வருமானத்தை விடவும் செலவு அதிகமாகவே உள்ளன. மார்ச் மாதத்திலேயே அதிகளவில் செலவுகள் உள்ளன. அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவும், கடன் மீளச் செலுத்துகை, மருத்துவ வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை விநியோகித்தல், உர விநியோகம் ஆகியவற்றை செய்ய வேண்டும். இவற்றுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை ஏன் விநியோகிக்கவில்லை என்று கேட்கின்றனர். ஏதேவோரு



முகாமைத்துவத்தை செய்தே தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம். அமைச்சருக்கு உள்ள அதிகாரத்திற்கமைய மக்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக நிதி முகாமைத்துவம் தொடர்பில் தீர்மானம் எடுக்கலாம். இதன்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்னுரிமை வழங்க வேண்டிய விடயங்களுக்கு முதலில் நிதியை வழங்க வேண்டும். இவற்றை பின்தள்ளி வைத்துவிட்டா, வேறு விடயத்திற்கு நிதியை வழங்க முடியும் என்று கேட்கின்றோம். முன்னுரிமை வழங்கும் விடயத்தில் எதனை நிறுத்துவது என்று கூறுங்கள்.

# கறுப்புச் சந்தையில் காப்புறுதி நிறுவனங்கள்

நாட்டில் செயற்படும் தனியார் காப்புறுதி நிறுவனங்கள் கறுப்புச் சந்தை மூலம் பாரிய வருமானத்தை பெற்று வருகின்றமை மற்றும் உரிய முறையில் வருமான வரியை செலுத்தாமை தொடர்பில் நிதியமைச்சு உரிய கவனம் செலுத்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடை க்கான வினா நேரத்தில் காமினி வலேபொட எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

காமினி வலேபொட எம்பி தமது கேள்வியின் போது, நாட்டில் பல தனியார் காப்புறுதி நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாகவும் அந்த நிறுவனங்கள் கறுப்புச் சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டு பாரிய வருமானத்தை ஈட்டி வருவதாகவும் அதற்கான வருமான வரி முறையாக செலுத்தப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த கொரோனா வைரஸ் காலத்தில் நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில், சேவையில் ஈடுபடுத்தாமல் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கும் விவசாயிகளின் உழவு இயந்திரங்களுக்கும் கூட எந்த சலுகையுமின்றி ஈவிரக்கமற்ற விதத்தில் முழுமையான தவணைக் கொடுப்பனவுகளை அறவிட்டு வந்துள்ளன. இதனால் வாகன உரிமையாளர்கள் விவசாயிகளும் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. அத்துடன் அத்தகைய நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு முறையாக வருமான வரியை செலுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.



இதற்கு பதிலளித்த போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதிலளித்த போதே, நாட்டில் செயற்படும் தனியார் காப்புறுதி நிறுவனங்கள் கறுப்புச் சந்தை மூலம் பாரிய வருமானத்தை பெற்று வருகின்றமை மற்றும் உரிய முறையில் வருமான வரியை செலுத்தாமை தொடர்பில் நிதியமைச்சு உரிய கவனம் செலுத்தும். அத்தகைய தனியார் காப்புறுதி நிறுவனங்கள் உரிய முறையில் வருமான வரியை செலுத்துகின்றனவா என்பது தொடர்பில் ஆராய விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அந்த விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்படும் என்றார்



# உயிர் குடிக்கும் மது

## தினமும் 40 பேர் இலங்கையில் அகால மரணம்

இலங்கையில் மது பாவனையினால் தினமும் சுமார் 40 பேர் அகால மரணமடைகின்றனர். மேலும் பல்வேறு சமூக, பொருளாதார, குடும்ப பிரச்சினைகளையும் மது பாவனை தோற்றுவிக்கின்றது. குறைந்த வருமானம் பெறுவோர் மத்தியில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான பிரதான காரணி மது பாவனை என கணிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டப்பகுதிகளில் தனது வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதி மது பாவனைக்கு செலவிடப்படுவதால் பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்திக்கு இப்பாவனை பாரிய தடையாகவும் உள்ளது.

அதே போன்று, நாட்டின் பொருளாதாரத்திற்கும் மது பாவனை தடையை ஏற்படுத்துகின்றது. நாட்டிற்கு கிடைக்கப்பெறும் வரி வருமானத்தின் சிறு பகுதியே மதுசார வரியாக கிடைக்கின்றது, ஆனாலும் அவ்வரி வருமானத்தை விட மது பாவனையினால் ஏற்படும் சுகாதார பாதிப்புகளுக்கு அதிகம் செலவிட வேண்டிய நிலைமையே அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது. ஆகவே இது ஒரு நட்டமான, சமூகத்திற்கு மேலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உற்பத்தி பொருளாகும்.

மது பாவனையினால் பாதிக்கப்படும் சமூகத்தில் இப்பிரச்சினைகளுக்கெல்லாம் முகங்கொடுக்கும் பிரதான இலக்குக் குழுவினராக பெண்களே காணப்படுகின்றனர். ஒரு பெண் குடும்பத்தின் பொறுப்புக்களை தன்னகத்தே கொண்டு வழிநடத்துபவளாக காணப்படுகின்றாள், பல குடும்பங்கள் இணைந்தே ஒரு சமூகம் உருவாகின்றது. ஒரு குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினை ஒரு சமூகத்தில் நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். கணவர் மதுசாரம் அருந்தும் ஒருவராக இருப்பின் வீட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, பெண்களுக்கெதிரான வன்முறைகளும், மன உளைச்சலும் ஏற்படுகிறது. மேலும் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதோடு, அக்குடும்பத்தின் மகிழ்ச்சி, சுதந்திரம் ஆகியன பறிபோன நிலையில் ஓர் இருண்ட வாழ்க்கையையே அதிகமான பெண்கள் வாழ்கின்றனர்.

எமது நாட்டில் ஆண்களின் மதுசார பாவனையே அதிகளவு காணப்படுகின்றது. 35 சதவீதமானோர் மதுசார பாவனையில் ஈடுபடுகின்றனர், பெண்களின் மது பாவனை புறக்கணிக்கத்தக்க அளவே காணப்படுகின்றது ஆனால் மது பாவனையினால் ஏற்படும் 90 சதவீதமான பிரச்சினைகளுக்கு பெண்களே முகங்கொடுக்கின்றனர், பெண்களே பாதிப்பும் அடைகின்றனர்.

ஆண்களின் மது பாவனை, பெண்கள் மீது எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது? பாவனையைக் குறைக்கும் போது பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை

**பெண்கள் பாலியல் ரீதியாக பாதிக்கின்றனர் என 43.4 சதவீதமானோரும் தெரிவித்திருந்தனர்.**

**கணவர் மதுசாரம் அருந்தும் ஒருவராக இருப்பின் வீட்டின் பொருளாதாரம் பாதிக்கும்**

**பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என 97.6 சதவீதமானோர் தெரிவித்திருந்தனர்**

குறைத்துக்கொள்ள முடியுமா என்கின்ற கருத்துக் கணிப்பொன்று 100 பெண்களிடம் மேற்கொள்ளப்பட்டது.

மது பாவனையினால், பொருளாதார பிரச்சினைக்கு ஆளாகின்றனர் என 54 வீதமானோரும், பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைகின்றது என 32.5 வீதமானோரும், 40 சதவீதமானோர் பல்வேறு வன்முறைக்கு பெண்கள் ஆளாகின்றனர் எனவும், வீட்டின் மகிழ்ச்சி இல்லாமல் போவதால் பெண்கள் பாதிக்கப்படுவதாக 27.7 சதவீதமானோரும், பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர் என 43.4 சதவீதமானோரும் தெரிவித்திருந்தனர்.

இக்கருத்துக் கணிப்பின் பிரதான முடிவாக, ஆண்களின் மதுசார பாவனையை குறைக்கும் போது, பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என 97.6 சதவீதமானோர் தெரிவித்திருந்தனர்.

பெண்கள் அல்லல் படும் துன்பங்களுக்கு மதுசார பாவனை காரணம் என 78.8 சதவீதமான பெண்கள் குறிப்பிட்டிருந்ததுடன், 97.6 சதவீதமான பெண்கள் மதுசார பாவனையை குறைத்தால் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளின் தாக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தனர்.

ஆகவே இம்மகளிர் தினத்திலேனும் பெண்களை மதிக்கும் ஒவ்வொருவரும் இதனை சிந்தித்து பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் பிரச்சினைகளை குறைப்பதற்கு முன்வர வேண்டும். மேலும் பெண்கள் தினமும் இது போன்று மதுசார பாவனையினால் ஏற்படும் பிரச்சினைகளை தாங்கிக்கொண்டு துன்பப்படாமல், குறித்த சந்தர்ப்பத்தில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி தமது மகிழ்ச்சியையும், சுதந்திரத்தையும் தக்க வைத்துக்கொள்வதற்கு வலுப்பெற வேண்டும்.

(மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்)

மலேரியா நுளம்புகளை

# கட்டுப்படுத்த முன்னாயத்தம்

எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனைப் பிராந்தியத்தில் மலேரியாவைப் பரப்பும் நுளம்புக்காவிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய மலேரியா கட்டுப்பாட்டுப் பிரிவு வைத்தியப் பொறுப்பதிகாரி டொக்டர்எம். எம். நௌஷாத், நேற்று (09) தெரிவித்தார்.



நுளம்புக் காவிகளைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக கொழும்பிலுள்ள தேசிய மலேரியாத் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த நிபுணர் குழு, கல்முனை பிராந்தியத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

இதனையடுத்து, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டொக்டர் ஐ.எல். எம் றிபாஸ் தலைமமையில், அக்கரைப்பற்று மாநகர சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்காக விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

கப்பி மீன் வளர்க்கப்படும் தொட்டிகள், கிணறுகளில் காணப்படும் தொற்று நிலைமை, கிணறுகளில் மீன் வளர்த்தல், கைவிடப்பட்ட கிணறுகளை நிரந்தரமாக மூடிவிடுதல் மற்றும் பாவிக்கும் கிணறுகளை தற்காலிகமாக வலைகளால் மூடுதல் ஆகிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மலேரியா தொற்றும் நாடுகளுக்குச் செல்வோரை அடையாளம் காணுதல் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுவதாக டொக்டர் நௌஷாத் தெரிவித்தார்.

வெளிநாடு செல்ல முன்னர் மலேரியாத் தடுப்பு இயக்கத்தைத் தொடர்புகொண்டு மாத்திரைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுமாறும் வெளிநாடு சென்று திரும்பிய பின்னர் காய்ச்சல் வந்தால் அருகிலுள்ள வைத்தியசாலையில் இலவசமாக மலேரியாவுக்கான பரிசோதனையைச் செய்துகொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தின் கீழ்

# 12,000 ஏக்கரில் சிறுபோகம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 12,000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்வதென, நேற்று (09) தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சுமார் 36 அடி நீர் கொள்ளளவைக் கொண்ட பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தில் தற்போது 30 அடி 2 அங்குல தண்ணீர் மாத்திரமே உள்ளது.

இதில் குளத்தின் பாதுகாப்பு, குடிநீர் விநியோகம் மற்றும் ஆவியாகுதல் என்பவை தவிர 59 ஆயிரம் ஏக்கர் கன அடி தண்ணீரை மாத்திரமே விவசாயத்துக்கு பயன்படுத்த முடியும் என்பதால் குறித்த நீர் கொள்ளளவை வைத்து இவ்வாண்டு ஏறத்தாள 11 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையும் 1,500 ஏக்கர் மேட்டு நிலச் செய்கையும் மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



மேற்படி தீர்மானம் எடுப்பது தொடர்பான ஆலோசனைகட கூட்டம், கிளிநொச்சி கோவிந்தன் கடை சந்தியில் அமைந்துள்ள திட்ட முகாமைத்துவ குழு அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு, மாவட்டச் செயலாளர் தலைமையில் இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டு, அதன்படி சிறுபோக செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## “என் சிறகில் சிக்கிய வானம்” நூல் வெளியீடு

வி.ரி.சகாதேவராஜா

எழுத்தாளர் மரீனா இல்யாஸ் ஷாபி எழுதிய “சிறகில் சிக்கிய வானம்” எனும் பயணக் கட்டுரைகளின் தொகுதி நூல், சாய்ந்தமருது மழ்ஹருஸ்ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை (11) காலை 8.30க்கு வெளியிடப்படவுள்ளது.

SRILANKA PEN CLUB அனுசரணையில், அதன் தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், இர்பான் மௌலானா முதன்மை அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

கவிஞர் மன்சூர் ஏ காதிர் (ஓய்வுநிலை பல்கலைக்கழகப் பதிவாளர்) மற்றும் ஆய்வாளர் சிராஜ் மஷூர் ஆகியோர், நூல் மீதான உரைகளை நிகழ்த்துவர்.

## வழமைக்குத் திரும்பிய நெல் அறுவடை

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக நெல் அறுவடை தடைபட்டிருந்தது.

தற்போது வெயில் காரணத்தால், நெல் அறுவடை வழமைக்குத் திரும்பியுள்ளது. அறுவடை இயந்திரங்களின் உதவியுடன் மும்முரமாக நெல் அறுவடை இடம்பெற்று வருகிறது.

அதேவேளை, நெல்லை உலரவைக்க பொதுவான இடங்கள் இல்லாமையால் வழமை போன்றே அறுவடை செய்யப்பட்ட நெல்லை பிரதான மற்றும் உள்ளூர் வீதிகளில் விவசாயிகள் உலரவைக்கின்றார்கள்.



இராணுவத்தினரால்

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு - கேப்பாபிலவு ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் 86 மாணவர்களுக்கு தலா 7,300 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 59ஆவது காலாற் படைப்பிரிவின் 591ஆவது காலாற் படைப் பிரிவினரால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு சர்வதேச ரோட்டரி கழகத்தின் அனுசரனையுடன் குறித்த பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

591ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் சுஜீவ பெரேரா, கொழும்பு சர்வதேச ரோட்டரி கழகத்தின் தலைவி திருமதி புபுது டி சொய்சா ஆகியோர் இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டதுடன், சிரேஷ்ட அதிகாரிகள், கொழும்பு சர்வதேச ரோட்டரி கழகத்தின் உறுப்பினர்கள், இராணுவத்தினர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.







ஓர் ஆரோக்கியமான வீடு:

## சமூக உற்பத்தித் திறன் ஊக்குவிப்புத் திட்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்



தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் “ஓர் ஆரோக்கியமான வீடு : சமூக உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு” எனும் திட்டத்தின் அறிமுகக் கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

இதன்போது உற்பத்தித் திறன் பிரிவின் மாவட்ட இணைப்பாளரால் குறித்த திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதற்காக 1,920 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் ரூபவதி கருத்துரைக்கையில், “உற்பத்தித் திறன் செயற்பாடுகள் இதுவரை காலமும் அலுவலக மட்டங்களில் பரவலாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. அடுத்துவரும் காலங்களில் பொதுமக்கள் தமது வீடுகளிலும் உற்பத்தித் திறன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இச்செயற்திட்டம் வழி வகுக்கிறது.

தேர்தலை நடத்தக் கோரி

## பிள்ளையான் தலைமையில் மகளிர் தின பேரணி

ரீ.எல்.ஜவ்பர்கான்

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோரி, இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையில், மட்டக்களப்பு நகரில் பாரிய கவனயீர்ப்புப் பேரணி, நேற்று முன்தினம் (08) மாலை முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த பேரணி, மட்டக்களப்பு கறுத்த பாலத்திலிருந்து ஆரம்பமாகி, பல்வேறு வீதிகள் வழியாகச் சென்று, மேற்படிக் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நிறைவடைந்தது.

ஆயிரக்கணக்கான பெண்கள் இதில் கலந்துகொண்டு, “வேண்டும்.. வேண்டும்.. தேர்தல் வேண்டும்”, “நடத்து.. நடத்து.. தேர்தலை நடத்து” மற்றும் குறித்தொதுக்கு.. குறித்தொதுக்கு.. பெண்ணின் இடத்தை குறித்தொதுக்கு” போன்ற வசனங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.





மனித உரிமை முறைப்பாடு:

## ஆசிரியர் தாக்கியதில் நடக்க முடியாத மாணவன்

பாறுக் ஷிஹான்

ஆசிரியர் கடுமையாகத் தாக்கியதால் முழங்கால் ‘சில்’ பகுதி பாதிப்புக்குள்ளானதாகக் கூறப்படும் மாணவனுக்கு நியாயம் கோரி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பாலமுனையிலுள்ள பாடசாலையில் தரம் 09இல் கற்கும் ஐ.அப்துல் ஹாதிக் எனும் மாணவனே, இவ்வாறு ஆசியரால் தாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி குறித்த பாடசாலையில் வைத்து ஆசிரியர் ஒருவர் தனக்கு பிரம்பால் அடித்து, தனது ‘சேர்ட் கொலரை’ பிடித்து தூக்கி, தூணில் அடித்து விட்டு, தன்னை தூக்கி வீசியதாக மாணவர் ஹாதிக் தெரிவிக்கின்றார்.

தற்போது பாதிக்கப்பட்ட மாணவர் நடக்க முடியாத நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் மற்றும் சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் அக்கரைப்பற்றுக் காரியாலயம் ஆகியவற்றில் தாம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அங்கு நடவடிக்கை எடுக்கப்படாத நிலையிலேயே, மனித உரிமை ஆணைக்குழுவில் தாங்கள் முறையிட்டதாகவும் மாணவனின் தாய் மற்றும் சகோதரன் (பெரியப்பாவின் மகன்) தெரிவித்தனர்.



எனினும், இந்தக் குற்றச்சாட்டை சம்பந்தப்பட்ட ஆசிரியர் மறுத்துள்ளார்.

இதேவேளை, “சம்பவம் நடந்து 06 நாட்களின் பின்னர் எனக்கும் எனது பெரியப்பா மற்றும் அவரின் மகனுக்கும் எதிராக பாடசாலையின் அதிபர், நாங்கள் அவரை அச்சுறுத்தியதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது பொய்யான முறைப்பாடு” என பாதிக்கப்பட்ட மாணவனின் சகோதரர் யு.எல். முபாஹித் தெரிவித்தார்.

பொலிஸாரால் கொல்லப்பட்ட

# சுலக்சனின் பிறந்தநாள்

வி.நிதர்ஷன்

பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் சுலக்சனின் பிறந்தநாள் நினைவு, அவரது குடும்பத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு ஒக்டேபர் மாதம் 21ஆம் திகதி இரவு, வீடு திரும்பிக்கொண்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களான வி.சுலக்சன் மற்றும் ந.கஜன் ஆகியோர் கொக்குவில் - குளப்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்கள் படுகொலை செய்யப்பட்டு 7 வருடங்கள் நிறைவடைந்தும் படுகொலையானவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரான சுலக்சனின் 31ஆவது பிறந்த தினமே, சுன்னாகத்தில் மாணவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட பயணிகள் பஸ் தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் (08) அனுஷ்டிக்கப்பட்டது.








முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், மாணவர் சுலக்சனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது மாணவர் சுலக்சனின் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# அக்குரணை வெள்ளத் தடுப்பை துரிதப்படுத்தவும்

அக்குரணை நகரையும் ,அதனை அண்டிய பிரதேசங்களையும் ஊடறுத்துச் செல்லும் பிங்கா ஓய, மழை காலத்தில் பெருக்கெடுப்பது போன்ற இன்னோரன்ன காரணங்களால் வெள்ளத்தில் மூழ்குவதை தவிர்ப்பதற்கு முன்னெடுக்கப்படவுள்ள செயல் திட்ட யோசனைகள் தொடர்பில் அதீத கரிசனை செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், சென்ற வாரம் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்ஹவுடன் கலந்துரையாடினார் .பிரஸ்தாப யோசனைகளை உள்ளடக்கிய திட்ட வரைவு நிறைவடைந்த உடனேயே அடுத்த கட்ட நடவடிக்கைககள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அதன்போது வலியுறுத்தப்பட்டது.

கண்டி மாவட்ட. பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம்,அப்துல் ஹலீம் ஆகியோர் அதிக மழை வீழ்ச்சியின் போது நீண்ட காலமாக அடிக்கடி சம்பவிக்கும் இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதில் கூடுதல் கவனம் செலுத்திவருகின்றனர்.

முன்னர் , முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நகர அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகித்தபோது,கண்டி பிராந்திய அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் காணி மீள் சீரமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக பாரிய கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி,மண்,மணல் மற்றும் கழிவுகள் மண்டியிருந்த பிங்க ஓயவில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு நீர் தங்கு தடையின்றி வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அவ்வாறே பல்வேறு பயனுள்ள முயற்சிகளை முன்னெடுத்திருந்ததோடு,பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உயரதிகாரிகளோடு பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றிருந்தன.

அங்கு,உரிய அனுமதி பெற்றிராத சட்டத்துக்குப் புறம்பான நிர்மாணங்களும் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன என்றும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## பதுளை இளைஞர் யுவதிகளே சனியன்று வந்துவிடுங்கள்
### அழைக்கிறார் அரவிந்தகுமார்



கல்வி அமைச்சின்கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களின் ஊடாக அவரவரின் திறமைக்கேற்ப தொழிற்பயிற்சிகளை வழங்க விஷேட திட்டமொன்றை முதற்கட்டமாக 11ஆம் திகதி சனிக்கிழமை பதுளை மாவட்டத்தில் ஆரப்பித்து வைக்கவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின்பின்னர் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே உயர்தரத்தில் கல்வியைத் தொடர்கின்றனர். பல்வேறு திறமைகளைக் கொண்டுள்ள மாணவர்கள் சாதாரண தரத்தின் பின்னர் உயர்தரத்துக்கு செல்லமுடியாத நிலையில் தொழிலின்றி அவலப்படுவதை காணமுடிகிறது.

அவ்வாறானவர்களை ஊக்கப்படுத்தி அவர்களும் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இந்த பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்றையதினம் காலை 9.00 மணிக்கு பயிற்சிக்கான அங்குரார்ப்பண செயலமர்வு இடம்பெறவுள்ளது.

## மகளிர் தின நிகழ்வு...

“ஏனைய சமுதாயத்தை போல் பெண் சமுதாயத்தையும் மதிப்போம்” என்னும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தை வட்டவளை அகரவத்த தோட்ட சிறுவர் பராமரிகப்பு நிலையத்தில், மார்ச் (08) ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வில் தோட்ட அதிகாரிகள், வட்டவளை பொலிஸ் நிலைய மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள், தோட்ட வைத்தியர் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துக்கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இரா.யோகேசன்

## இருவர் மீது குளவி கொட்டு

டி.சந்ரு, எஸ்.கே. குமார்

குளவி கொட்டுக்கு இலக்காகிய தொழிலாளர்கள் இருவர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, லபுக்கலை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில், 42 மற்றும் 24 வயதான ஆண் தொழிலாளர்கள் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலைச் செடிகளுக்கு அடியில் கட்டப்பட்டிருந்த குளவிகளே புதன்கிழமை (08) காலை 9 மணியளவில், கலைந்து கொட்டியுள்ளது

## ஹோல்புறூக் நகரில் மகளிர் தின பேரணி





துவாரகஷான்

சர்வதேச மகளிர் தினத்தன்று லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரி துரைராஜ் ரேஷ்னி மற்றும் வைத்திய அதிகாரி சந்துன் பிரசன்ன ஜயலத் ஏற்பாட்டில் அக்கரப்பத்தனை ஹோல்புறூக் நகரில் பேரணி இடம்பெற்றது.

மெல்போரல் சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பேரணி அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய விளையாட்டு மைதானம் வரை சென்றடைந்தது.

பெண்களுக்கு எதிரான வன்முறை, குடும்ப வன்முறை, சிறுவயது திருமணம், பெண்களுக்கு எதிரான உரிமை மீறல், உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஹோல்புறூக் தமிழ் வித்தியாலய சிங்கள மகா வித்தியாலய மாணவர்கள் பொது சுகாதார அதிகாரிகள் ஆகியோரால் வீதி நாடகமும் அரங்கேற்ப்பட்டது.

இப்பேரணியில் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். வைத்திய அதிகாரிகள் தொழிலாளர்கள் பாடசாலை மாணவர்கள் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## குதன் செட்டி சுரேஷ் நியமனம்

எஸ்.கே.குமார்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட முகாமையாளராக குதன் செட்டி சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதி குழு தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகனின் வேண்டு கோளுக்கமைய நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, வியாழக்கிழமை (09) வழங்கிவைத்தார்.

## மகனை பதம்பார்த்த தந்தை சிக்கினார்

நடராஜா மலர்வேந்தன்

தன்னுடைய 18 வயதான மகனை கத்தியால் வெட்டி காயப்படுத்தினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ், அவரது தந்தை பொலிஸாரினால் நேற்று (09) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம், பசறை, கோணக்கலை ரேந்தபல பிரிவிலேயே புதன்கிழமை (08) இரவு இடம்பெற்றுள்ளதது.

வீட்டில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞனின் சடலம் மீட்பு

டி சந்ரு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெஸ்போட் பிரதேசத்தில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீரை எடுத்துச் செல்லும் ஆற்றில் நீராட சென்று காணாமல் போயிருந்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா டெஸ்போட் மேல் பிரிவு பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மகேந்திரன் சதிஸ்குமார் என்ற இளைஞரே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை அன்று சடலமாக மீட்கப்பட்டார்.

தனது வீட்டில் சிறிய முரண்பாடு காரணமாக நானுஓயாவில் கிலாரண்டன் பகுதியில் தனது உறவினர் வீட்டில் ஐந்து நாட்களுக்கு மேலாக தங்கி இருந்த நிலையிலே நீராட சென்றுள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

## வழிகாட்டல் செயலமர்வு

பதுளை, பசறை, மொனராகலை ஆகிய கல்வி வலயங்களுக்கு கீழுள்ள தமிழ் மொழி மூல உயர்தர பாடசாலைகளில் ,உயர்தரம் கற்று பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு, நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.9.00 மணிக்கு பதுளை, சரஸ்வதி தேசிய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இராஜாங்க கல்வி அமைச்சர் அ.அரவிந்குமாரின் ஏற்பாட்டிலேயே இந்த செயலமர்வு இடம்பெறவுள்ளது.

## மின்கட்டணத்துக்கு பந்தமேந்தி எதிர்ப்பு

மின்கட்டணத்தை அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8ஆம் திகதி, நாவலப்பிட்டிய பல்லேகம பிரதேசத்தில் பந்தமேந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.



தேசிய மக்கள் சக்தியினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விலைகளை குறைத்தால் விலைகளை குறைப்போம்

பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை குறைத்தால், பாண் விலையை இன்னும் குறைத்து, நுகர்வோருக்கு விற்பனைச் செய்யமுடியுமென தெரிவித்த ஹட்டன் பேக்கரிகளின் உரிமையாளர்கள், ஒரு கிலோகிராம் கேக்கின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது என்றனர்.

கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டதை அடுத்து, பாணின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது, ஏனைய பேக்கரி உற்பத்திகளும் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. பேக்கரி உற்பத்திகளின் விலைகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டாலும், நுகர்வோரிடமிருந்து கூடுதலான வரவேற்பு இல்லை என்றனர்.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 15 ரூபாவினால் குறைக்கப்பட்டாலும், பேக்கரி உற்பத்தி பொருட்களுக்கான ஏனைய மூலப்பொருட்களின் விலை, கடுமையாக அதிகரித்துள்ளது.

முட்டை விலையும்

**“ கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டதை அடுத்து, பாணின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது, ஏனைய பேக்கரி உற்பத்திகளும் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது**

அதிகரித்துள்ளது. ஆகையால் பாண் ஒன்றை தயாரிப்பதற்கான தயாரிப்பு செலவும் அதிகரித்துள்ளது என்றும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



# சிக்கல்களைத் தணித்து வாக்காளர்களுக்கு வலைவீச முயற்சி

இலங்கை ரூபாயின் மதிப்பு வலுப்பெறுவதுடன், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடைந்து வருகின்றமை பற்றிய தகவல்கள் இந்நாட்களில் வெளியாகின்றன.

கோதுமை மா, பருப்பு, சீனி, வெங்காயம், கிழங்கு போன்ற உணவுப் பண்டங்களும், அவற்றினால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ரூபாயின் பெறுமதி இவ்வாறு தொடர்ந்தும் உறுதியடைந்து வந்தால் எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ள எரிபொருள் விலைச்சூத்திரத்துக்கு அமைவான விலைத் தீர்மானத்தின் போது, எரிபொருள்களின் விலைகளும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எரிபொருள்களின் விலை குறைவடைந்தால், போக்குவரத்து சார்ந்த அனைத்து செலவுகளும் குறைவடையும். இதை நாம் கடந்த காலங்களில் பெருமளவு அனுபவித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மூன்றாம் அல்லது நான்காம் வாரத்தில் நிதி உதவிக்கான அனுமதி கிடைத்துவிடும் என்பதை காரணம் காண்பித்தும், தம்மால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்களினாலேயே இலங்கை ரூபாய் வலுப்பெற்று வருவதாகவும் நாடாளுமன்றத்திலும், பொது மேடைகளிலும் அரசியல்வாதிகள் புகழ்பாடுவதை அவதானிக்க முடிகின்றது.

உண்மையில், நாட்டினுள் அந்நியச் செலாவாணி வரத்து அதிகரித்துள்ள நிலையில், நாட்டிலிருந்து அந்நியச் செலவாணி வெளிச் செல்வது அல்லது இறக்குமதிசார் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே ரூபாயின் மதிப்பு உயரக் காரணமாக அமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தொடர்ந்து பேணுவது அல்லது அதில் ஏதேனும் தளர்வுகளை மேற்கொள்வது பற்றிய நிபந்தனைகள் உள்ளடங்கியுள்ளனவா என்பதை பொறுத்திருந்தது பார்க்க வேண்டும்.

எவ்வாறாயினும், இவ்வாறான இறுக்கமான இறக்குமதிசார் பொருளாதாரக் கொள்கைகளுடன், நாட்டின் ஏற்றுமதியை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அரசியல்வாதிகள் கருத்துக்களை வெளியிடுகின்றனர். உண்மையில், ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு, அவற்றுக்கான மூலப்பொருட்களை கட்டுப்பாடுகளின்றி இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். கோட்டா அடிப்படையிலேயே இன்னமும் ஏற்றுமதித் துறையில் ஈடுபடும் வியாபாரங்களுக்கு எரிபொருள்கள் வழங்கப்படுகின்றன. இவற்றில் மாற்றங்களையும் தளர்வுகளையும் கொண்டு வந்து அவற்றை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட ஆரம்பித்ததும், இலங்கை ரூபாயின் மதிப்புக்கு என்னவாகும் என்பதைக் காணலாம்.

அறியாமையைக் கொண்ட மக்களுக்கு போலி வாக்குறுதிகளையும், பொருளாதார மாயைத் தோற்றங்களையும், வயிற்றுக்கு தீனியாகும் உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்து அவர்களின் மனங்களில் இடம்பிடிக்க இந்த அரசு முனைகின்றதா என எண்ணும் வகையில் இந்த விலைக்குறைப்பு பற்றிய அறிவிப்புகள் அமைந்துள்ளன.

தேர்தல் நெருங்கி வருகையில் இவ்வாறு விலைக் குறைப்புகள், சலுகைகள் போன்றன இடம்பெறுவது வழமை. கடந்த காலங்களில் இவ்வாறான சலுகைகளையும், விலைக்குறைப்புகளையும் வழங்கியே அக்கால அரசாங்கங்கள் மற்றும் கட்சிகள் தமது இருப்பை தக்க வைத்திருந்தன.

மக்கள் மத்தியில் தற்போது காணப்படும் பெரும் பிரச்சினை இந்த பொருளாதாரச் சிக்கல். இதனை தணிப்பதாக சித்தரிக்கும் நடவடிக்கைகளையே அரசாங்கம் கட்டவிழ்த்துள்ளது. ஆகவே, அரசாங்கம் ஒரு தேர்தலுக்கு தயாராவதாகத் தெரிகின்றது.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களைத் தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மையின்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப்போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் மனம்விட்டுப் பேசவேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்றலாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியோர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலது தீவிரவாதத்தின் நிழலில் – 18:

# மலேசியத் தமிழரும் அதிவலதில் அள்ளுண்ணலும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சதிக் கோட்பாடுகளுக்கு ஒரு ரசிகர் கூட்டம் இருக்கிறது. அக்கோட்பாடுகள் பெரும்பாலும் தேச, பிரதேச, இனத்துவ, அடையாள எல்லைகளுக்கு உட்பட்டவை. சதிக் கோட்பாடுகள் அரசியல் அரங்கில் முக்கியமான கருவியாக உள்ளன. அரசியலை அறிவுபூர்வத் தளத்தில் இருந்து அகற்றி உணர்வுபூர்வத் தளத்திற்குத் தள்ளுகின்ற போது அரசியல் அரங்காடிகளுக்கு சதிக்கோட்பாடுகள் பயன்படுகின்றன.

உலகெங்கும் சதிக்கோட்பாடுகளும் அதிவலது தீவிரவாதமும் இடைவெட்டும் நிகழ்வுகள் ஏராளம் நிகழ்ந்துள்ளன. இப்போதும் நிகழ்கின்றன. சதிக் கோட்பாடுகள் வலதுசாரி தீவிரவாதத்திற்கு உந்து சக்தியாக இருக்கின்றன. சமகால சதிக் கோட்பாடுகள் பொதுவாக அதிகாரம் குறித்தோ அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் அதிகார நலன்கள் குறித்தோ சுழல்கின்றன.

இந்த சித்தாந்தத்துக்கு ஆட்படுபவர்கள் உண்மைகளை சிதைத்து, வழக்கமான உண்மையை அவர்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை மீதான உடனடி தாக்குதலாக சித்தரிக்கின்றனர். சதிக் கோட்பாடுகளை கதைகளை இயக்கவும், மேலாதிக்க குழுக்களின் நிலையை சட்டப்பூர்வமாக்கவும், துருவமுனைப்பை அதிகரிக்கவும் பயன்படுத்துவது புதிதல்ல.

மலேசியா ஒரு பல்லின, பல் மதங்களைக் கொண்ட நாடாகும். இது கூட்டாட்சி அரசியலமைப்பைக் கொண்ட முடியாட்சியால் ஆளப்படுகிறது. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் மலேசியாவை ஒரு மதச்சார்பற்ற நாடாகக் கருதினாலும், இஸ்லாம் உத்தியோகபூர்வ மதமாகும். மலாய் மக்களுக்கான சிறப்புச் சலுகைகளைக் கொண்டுள்ளார்கள். நாட்டின் பெரும்பான்மையான மலாய் வாக்காளர்கள் மலேசியாவை ஒரு இஸ்லாமிய இறையாட்சி கொண்ட நாடாகக் கருதுகின்றனர். மலேசியாவில், மலாய்-முஸ்லிம்கள் 'ஒரு பாதிக்கப்பட்ட சமூகம்' என்ற கதையாடலை நம்புகிறார்கள். அதற்கு அவர்களது சில சிந்தனைகள் காரணமாகின்றன. அவர்களது உலகக் கண்ணோட்டமானது, யூத-எதிர்ப்புக் கருத்தியலாலும் சீன சிறுபான்மையினருக்கு எதிரான தப்பெண்ணங்களாலும்; வடிவமைக்கப்பட்டது. அவர்களிடம், சீனர்கள் மலாய் அரசியல் மேலாதிக்கத்தை அங்கீகரிக்கும் 'சமூக ஒப்பந்தத்தை' ஏற்றுக்கொள்ளவோ அல்லது கடைப்பிடிக்கவோ மறுக்கிறார்கள் என்ற நிலையான நம்பிக்கை உள்ளது. மேலும் சீனர்கள் 'வரவேற்கப்படாத விருந்தினர்கள்' என்று இழிவான முறையில் முத்திரை குத்தப்படுகிறார்கள்.

இந்த தப்பெண்ணங்கள் மதச்சார்பின்மை, உலகமயமாக்கல் மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியம் மற்றும் மலாய்-முஸ்லிம் விழுமியங்களைத் தகர்க்க முயலும் யூத-கிறிஸ்தவ மேலாதிக்கத்தை உள்ளடக்கிய புதிய உலக ஒழுங்கு என்று அழைக்கப்படும் ஒரு கற்பனை எதிரி தொடர்பான கூக்குரல்களை உருவாக்குகின்றன.

இந்துப் பெரும்பான்மைவாதத்தை வலியுறுத்தி நாட்டின் முஸ்லீம் மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்ட உதவும் இந்துத்துவா சித்தாந்தத்தை இந்தியா முன்னெடுப்பதானது மலேசியாவில் உள்ளூர்மயமாக்கப்பட்ட 'பெரிய மாற்றீடு' (புசநயவ சுநிடயஉநஅநவெ) என்ற சதிக்கோட்பாட்டுக் கதையாடலைத் தூண்டியது. அண்மையில், இந்தியாவின் கொந்தளிப்பான அரசியலானது, மலாய் தீவிர வலதுசாரி பழமைவாதிகள் மத்தியில் ஏற்கனவே இருக்கும் சந்தேகங்களைப் புதுப்பித்தது.

அவர்கள் பெரும்பாலும் தமிழ் இனத்தவர்களான உள்ளூர் இந்திய சமூகங்களை 'நன்றியற்ற தாழ்ந்தவர்கள்' என்று நம்புகிறார்கள். இத்தமிழர்கள் ஒருநாள் மலாய் முஸ்லிம்களை நாட்டைவிட்டு வெளியேற்ற விரும்புகிறார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தமும் தனிநாடு கோரிய தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான மலேசியத் தமிழர்களின் ஆதரவு மிகுந்த சந்தேகக் கண்ணோடும் அச்சத்தோடும் பார்க்கப்பட்டது. அதேவேளை மலேசியாவில் சிறுபான்மைச் சமூகமாக உள்ள இந்தியத் தமிழர்கள் தங்கள் நியாயமான குறைகளை வெளிப்படுத்தத் தொடங்கியபோது இந்த விரோதம் இன்னும் அதிகரித்தது. 2005இல் மலேசியாவில் உள்ள 29 இந்திய அமைப்புகள சேர்ந்து இந்து உரிமைகள் நடவடிக்கைப் படை (ர்iனெர சுiபாவள யுஉவழைn குழசஉந-ர்ஐNனுசுயுகு) என்றதொரு அமைப்பை உருவாக்கி அவர்கள் மீது காட்டப்படும் பாகுபாடுகளுக்கு எதிராகவும் அரசின் கோயில் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கும் எதிராகவும் போராடினார்கள். விடுதலைப்புலிகளின் மலேசிய அனுதாபிகள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நோக்கப்பட்டனர்.

இத்தனைக்கும் மலேசியர்களையோ மலாயர்களையோ குறிவைக்கும் நோக்கம் விடுதலைப் புலிகளுக்கு இல்லை என்பது வெளிப்படையானது. 2009இல் விடுதலைப் புலிகள் முழுமையாக ஒழிக்கப்பட்டபோதிலும், மலேசியாவின் தமிழ் சமூகத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு இது உதவவில்லை. மாறாக மலேசியாவில் புலிகளை மீண்டும் உயிர்த்தெழுப்ப முயற்சிப்பதாக குற்றச்சாட்டுகள் தொடர்ந்தன.

பல தசாப்தங்களாக, மலாய் அரசியல் அரங்காடிகள் இந்த முற்றுகை மனநிலையைப் பயன்படுத்தி தங்கள் வாக்குகளை நிறைக்கிறார்கள். சிறுபான்மையினத்தவர் பற்றிய பொய்ப்பிரச்சாரங்களும் சதிக்கோட்பாடுகளும் இதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இது 2018 ஆம் ஆண்டில் அனைத்து வகையான இனப் பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐ.நா.வின் சர்வதேச பட்டயத்தை (*International Convention on the Elimination of All Forms of Racial Discrimination*) மலேசியா அங்கீகரிப்பதற்கு எதிரான எதிர்ப்பையும் தூண்டியது. அதிவலது சக்திகள் தேர்தலில் கணிசமான வாக்கைப் பெறுவதற்கு இந்தப் பட்டயத்திற்கு எதிரான பிரச்சாரம் முக்கிய பங்காற்றியது.

சமீபத்தில், மலாய் இனவாதிகள் ஆன்லைனில் மலேசியாவின் வரலாற்றை மீளுருவாக்கம் செய்யும் பணியில் இறங்கியுள்ளார்கள். ஆரம்பகால மலாய் இராச்சியத்தில் பண்டைய இந்தியச் செல்வாக்கு இருக்கவில்லை என்றும் மலேசியாவுக்கு இந்து-பௌத்த கடந்த காலம் இல்லை என்றும் மலேசியா எப்போதுமே இஸ்லாமியர்களுடையதாகவே இருந்தது என்றும் கூறி வருகின்றனர்.

கடந்தாண்டு இறுதியில் இடம்பெற்ற பொதுத்தேர்தலும் அக்காலத்து அரசியல் கதையாடல்களும் எவ்வாறு அதிவலது செல்வாக்கு இன்று மலேசியாவின் மையநீரோட்டத்தை ஆட்சிசெய்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவும். பொதுத் தேர்தலின் போது, சமூக ஊடகங்களின் வழி தவறான தகவல்களைப் பயன்படுத்தி, முரண்பாட்டைத் தூண்டி, தவறான தகவல்களைப் பரப்பி, கடுமையான துருவமுனைப்புக்கான நிலைமைகளை மேம்படுத்துவதற்காக சதி கோட்பாடுகளை உருவாக்கினர். இது வன்முறையில் முடிந்தது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது எழுப்பப்பட்ட பிரச்சினைகளும் கவனம் பெற்ற குறைபாடுகளும் புதுமையானவை அல்ல. எவ்வாறாயினும், இம்முறை, உள்ளார்ந்த மற்றும் வெளிப்புற நெருக்கடிகள் காரணமாக அதிவலது சக்திகள் மிகவும் தைரியமடைந்துள்ளனர். இப்போதே பலர், மலேசியா 'வலதுசாரி தீவிரவாதத்தின் திடீர் எழுச்சியுடன்' போராடிக் கொண்டிருப்பதைக் கண்டறிந்தாலும், இந்த நிகழ்வு புதிதல்ல. இதை விளங்க நீண்டகாலம் எடுத்துள்ளது என்பதே உண்மை. மலேசியாவில் அதிவலதுக் கோட்பாடுகள் மற்றும் சதி கோட்பாடுகளின் முக்கிய நீரோட்டமானது, சமூக ஊடகங்கள் மற்றும் வழிமுறைகளின் பெருக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

அதே சமயம், சமூகக் கலவரங்களைத் தங்கள் சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் அரசியல் ஸ்தாபனங்களுக்கும் தலைவர்களுக்கும் அதிவலது சித்தாந்தம் பயன்விளைவிக்கிறது. வீரியம் மிக்க அரசியல் அரங்காடிகள தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களைத் தங்களின் பிரச்சாரங்கள், செய்தி பரப்புதல், கதையாடல்களை உருவாக்கல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துவதில் அதிக நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். மேலும், தற்போதுள்ள இன மோதல்களையும் கடுமையான உள்நாட்டு அரசியலை ஸ்திரமின்மையையும் பயன்படுத்திக் கொண்டு - ஒரு சட்டபூர்வமான அரசாங்கத்தின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை சிதைக்கும் நோக்கத்துடன் - தவறான தகவல் மற்றும் சதி கோட்பாடுகளிற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

அண்மைய மலேசியத் தேர்தல்களின் போது, தவறான தகவல் தந்திரோபாயங்கள் பெரும்பாலும் மூன்று இலக்குகளை அடையப் பயன்படுத்தப்பட்டுள்ளன: 1) அவநம்பிக்கையின் சூழலை உருவாக்குவதன் மூலம் தேர்தல் முடிவுகளைத் திசைதிருப்பல். 2) துருவமுனைக்கும் சித்தாந்தங்களை ஊக்குவித்தல். 3) வாக்காளர் எண்ணிக்கையைக் குறைத்தல். இவை மூன்றையும் சதிக்கோட்பாடுகளும் அதை மக்களிடம் எடுத்துச் செல்லும் சமூகவலைத்தளப் பயனர்களும் (சைபர்ட்ரூப்பர்கள்) திறம்படச் செய்கின்றன. தவறான தகவல்களைப் பரப்புவதற்கும், போட்டியாளர்களை இழிவுபடுத்துவதற்கும், அரசியல் கதையாடல்கள் தடம் புரளுவதற்கும், ஆன்லைனில் பொதுக் கருத்தைக் கையாளுவதற்கும் அரசியல் கட்சிகள் அல்லது பிற அமைப்புகளால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர்கள் சைபர்ட்ரூப்பர்கள் எனப்படுகிறார்கள்.

வாக்குகள் மற்றும் தேர்தல் முடிவுகளில் செல்வாக்கு செலுத்துவதில் தவறான தகவல் பெருகிய முறையில் பரப்புபவதானது சக்திவாய்ந்த கருவியாக மாறியுள்ளது. தவறான தகவல்களைப் பரப்புவதன் மூலம், கட்சிகள் பொதுக் கருத்தை பாதிக்கவும், அவநம்பிக்கையின் சூழலை உருவாக்கவும் முடியும். இது மிகப்பாரியளவிலான துருவப்படுத்தப்பட்ட அரசியல் பார்வைகளுக்கு வழிவகுப்பதோடு சமூகங்களை பிளவுபடுத்தும். இன்னொரு வகையில் இது 'சிவப்பு-குறியிடல்' எனப்படும் கம்யூனிச அபாயம் என்று ஓரங்கட்டவும் பயன்படுகிறது. இது நபர்களையும் அமைப்புகளையும் கம்யூனிஸ்டுகள் அல்லது பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவது, அவர்களுக்கு எதிரான கட்டாய நடவடிக்கைகளை மேற்கொள்வது அதை நியாயப்படுத்துவது அவர்களை இழிவுபடுத்துவது என்பன எல்லாம் அதிவலதினதும் சதிக்கோட்பாட்டினதும் இணைவினால் தென்கிழக்காசியாவில் சாத்தியமாகிறது.

## கடிதங்கள்

# மையவாடியில் சிரமதானம் தேவை



அம்பாறை மாவட்டத்தில், 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் கரையோர பிரதேசங்களில் மரணித்த ஜனாஸாக்களை, நல்லடக்கம் செய்துள்ள சம்மாந்துறை காட்டுப்பள்ளி மையவாடி அமைந்துள்ள இடம், புற்கள் வளர்ந்து பற்றைக்காடாக மாறியிருக்கிறது.

டிசெம்பர் 26ஆம் திகதி சுனாமி தாக்கத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டித்த மக்கள், குறித்த மையவாடிக்கு சென்று அங்கு நல்லடக்கம் செய்துள்ள உறவினர்களுக்காக துஆ பிராத்தனையில் ஈடுபட்டனர்.

சுனாமி அலையில் அள்ளுண்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு, ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அடைக்கலம் கொடுத்த சம்மாந்துறை மக்கள், மரணித்த சகோதரர்களின் உடல்களையும் சம்மாந்துறையின் பல மையவாடிகளில் நல்லடக்கம் செய்ய வாய்ப்பளித்தனர்.

மரணித்த சகோதர்களை கௌரவிக்கும் விதமாக, அந்தப் பிரதேசத்தை வேலியமைத்து, குறித்த பள்ளிவாசல் நிர்வாகமும் சம்மாந்துறை மக்களும் பாதுகாத்து வருகின்றனர். இருந்தாலும், இந்த மையவாடியின் இன்றைய நிலை கவலையளிக்கும் நிலையாக மாறியிருக்கிறது.

எனவே, குறித்த மையவாடியை சிரமதானம் செய்து, அந்த மையவாடிக்கான பெயர்பலகையை பொருத்த அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகள், அரசியல் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்கள் முன்வரவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

– மொஹமட் நியாஸ்

சிறுமட்ட விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க

# USAID மற்றும் FAO உதவி

ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய ஸ்தாபனமானது (FAO), சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரமைப்புடனும் (USAID), விவசாய அமைச்சுடனும் இணைந்து இலங்கையின் உலர், இடை வலயங்களில் நெல்லை அடிப்படையாகக் கொண்ட சூழற்றொகுதிகளின் உற்பத்தித்திறனையும், நெகிழ்வுறுதியான தன்மையையும் அதிகரிக்கவுள்ளது.

இலங்கையில் நெற்செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் 890,000 ஹெக்டயர் விவசாய நிலத்தில் எழுபத்தைந்து சதவீதமானது சிறு மட்டத்திலான விவசாயிகளின் கீழ் உள்ளது. நாட்டில் அதிகளவான உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்ட போதிலும், இலங்கையில் நெல் பயிரிடப்படும் பிரதான சூழற்றொகுதிகளில் (உலர், இடை வலயங்கள்) கடந்த 10 ஆண்டுகளில் உற்பத்தித்திறனானது மந்தமான போக்கிலோ அல்லது குறைவடைந்தோ செல்கின்றது. இது ஆசியாவில் உள்ள ஏனைய நெல் விளையும் நாடுகளில் காணப்படும் உற்பத்தி அதிகரிப்புக்கு முரணானதாக காணப்படுகின்றது.

உலர், இடை வலயங்களில் நெல் உற்பத்தித்திறனானது வெறுமனே 10 சதவீதத்தால் அதிகரித்தால் கூட, இலங்கை 0.5 மில்லியன் தொன் அரிசியை மேலதிகமாக உற்பத்தி செய்யக்கூடியதாயிருக்கும். உற்பத்தித்திறன் மிக்க, வினைத்திறனான பயிர்ச்செய்கை நுட்பங்களை அறிமுகப்படுத்தினால், குறைந்தளவான நீர் மற்றும் இரசாயன உள்ளீடுகளுடன், குறைந்த செலவில் அதிகளவான உற்பத்தித்திறனை அடைய முடியும். மிகவும் வினைத்திறனான பயிர்ச்செய்கையானது ஏனைய பயிர்களுக்கு ஏறத்தாழ 100,000 ஹெக்டயர் நிலத்தை விடுவித்து, நாடு இறக்குமதியை நம்பியிருக்கும் நிலையைக் குறைக்கும்.

FAO, USAID, விவசாய அமைச்சின் விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து உலர், இடை வலயங்களில்




நெல் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்தை உருவாக்கி வருகின்றன. மனிலாவிலுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), அரசாங்கம், கல்வியாளர்கள், விவசாய விஞ்ஞானிகள், சிவில் சமூகம், தனியார் துறை ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்ளுடனும், பங்குதாரர்களுடனும் இணைந்து FAO ஆனது இந்த வாரம் ஒரு ஆரம்ப செயலமர்வை நடத்தியது. நெல் உற்பத்தித்திறனை அதிகரிக்கத் தேவையான தொழிநுட்பங்களையும், திறன்களையும் விவசாயிகள் பெற்றுக்கொள்வதை அதிகரிப்பதற்கான சூழலை உருவாக்க ஒரு திட்ட வரைபடத்தை இதில் பங்குபற்றியவர்கள் உருவாக்கினர்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான USAID பணிப்பாளர் கேப்ரியல் கிராவ் இந்த செயலமர்வில் பங்குபற்றியோரிடையே உரையாற்றும் போது 'விவசாய அமைச்சு, தனியார் துறை, FAO மற்றும் USAID ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பானது இலங்கையில் உணவு பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் அப்பாற்பட்டதாகும் என்றார். இலங்கையின் விவசாயத்துறையை மானியத்திலிருந்து சந்தை அடிப்படையிலான, தனியார் துறை சார்ந்த, போட்டி விவசாயமாக மாற்றுவதே எங்களது ஒருங்கிணைந்த நீண்ட கால நோக்கமாகும். இதை அடைவதற்கு, புதிய தொழில்நுட்பங்கள், திறமையான அமைப்புகள் மற்றும் விவசாயத் துறையில் அனைத்து பங்குதாரர்களின் நீண்ட கால அர்ப்பணிப்பு ஆகியன முக்கியமானவையாகக் காணப்படும்;' எனத் தெரிவித்தார்.

'தொழிநுட்பம் ஒருபோதும் விவசாயிக்கு மாற்றீடாக அமையாது, ஆனால் தொழிநுட்பத்துடன் விவசாயி விவசாயத்தை மாற்றுவார் - மாற்ற வேண்டும். சிறு விவசாயிகள் இலங்கையின் விவசாயத் துறையின் முதுகெலும்பாக உள்ளனர், மேலும் இந்த முயற்சியின் மூலம், குறைந்த நிலத்தையும், உள்ளீடுகளையும் பயன்படுத்தி அவர்களின் உற்பத்தித்திறனையும், இலாபத்தையும் அதிகரிப்பதற்குத் தேவையான தொழிநுட்பங்களையும், திறன்களையும் கொண்ட பெருமளவான சிறு நெல் விவசாயிகளை ஆயத்தம் செய்ய முடியுமென நாங்கள் நம்புகின்றோம். விவசாய அமைச்சு, USAID, சிறு நெல் விவசாயிகள் ஆகியோரின் ஒத்துழைப்புகளின் ஊடாக, இந்தத் திட்டம் இலங்கையை உணவுப் பாதுகாப்பு மிக்க நாடாக மாற்றுவதற்கான பாதையில் உறுதியாக பயணிக்க முடியும்' என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான FAO பிரதிநிதி விம்லேந்திர ஷரன் தெரிவித்தார்.

FAO மற்றும் USAIDஇன் தொடர்ச்சியான ஒத்துழைப்புடன் முன்னோக்கி கொண்டு செல்வதற்காக, செயலமர்வின் மூலம் உருவாக்கப்பட்ட சிபாரிசுகள் விவசாய அமைச்சர் கௌரவ. மகிந்த அமரவீரவுக்கு இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும்.

# ஜப்பான் 46 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மனிதநேய உதவி

இலங்கையின் பொது வைத்தியசாலைகளுக்கு டீசலைப் பெற்றுக் கொள்வதற்காக 46 மில்லியன் அமெரிக்க டொலர்களை மனிதநேய மானிய உதவியாக வழங்குவதற்கான உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி கைச்சாத்திட்டார். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை அரசாங்கம் சார்பாக திறைசேரி, நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு செயலாளர் கே.எம். எம். சிறிவர்தன கைச்சாத்திட்டார். இந்நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக எழுந்துள்ள எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமையினால், நாடு முழுவதிலுமுள்ள 1,180 பொது வைத்தியசாலைகளுக்கு, மின்வெட்டு அமுல்படுத்தப்படும் காலப்பகுதிகளில் மருத்துவ சேவைகளையும் அத்தியாவசியமற்ற மருத்துவ செயற்பாடுகளை முன்னெடுப்பதையும் இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளன. நோயாளர் காவு வண்டிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொண்டு செல்லும் வண்டிகள், அவசர நோயாளர்களை கொண்டு செல்லும் வண்டிகள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் சாதனங்கள் பயணிக்கும் வாகனங்கள் போன்றனவும் இந்த எரிபொருள் நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளன.



இந்த மனிதநேய உதவித் திட்டத்தினூடாக இலங்கைக்கு உதவும் வகையில் 20 மில்லியன் லீற்றர் டீசலை வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது. அதனூடாக, பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் நிலைபேறான மருத்துவ சேவைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன், ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி சந்திப்பொன்றை மேற்கொண்டார். அதன் போது, இலங்கைக்கு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும், நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கும், ஜப்பானிய தனது ஆதரவை வழங்க அர்ப்பணித்துள்ளமையை தெரிவித்தார். 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ஜப்பானிய அரசாங்கம் 104 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மானிய உதவியை வழங்கியுள்ளதாக தூதுவர் குறிப்பிட்டிருந்ததுடன், அதில் 77.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மனிதநேய உதவிக்காக வழங்கப்பட்டிருந்தது. இதில் 46 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எரிபொருள் உதவியாக அமைந்திருந்தது. வரலாற்றில், இலங்கைக்கு ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ள அதியுயர் மானியத் தொகையாக இது அமைந்திருப்பதுடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தொடர்ச்சியான ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஜப்பானின் உறுதியான அர்ப்பணிப்பின் அடையாளமாக இது அமைந்துள்ளது.

# நம்ம ஊர் நாட்டார் தெய்வம்



தே.கவினயா
(நான்காம் வருடம் ஊடகக்கற்கைகள் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)



தெய்வ வழிபாட்டு முறைகள் காலமாற்றத்தின் காரணமாக பல்வேறு பரிணாம வளர்ச்சி கண்டுவருகின்றது. ஆனாலும் கூட கிராமவாசிகளிடையே தெய்வ வழிபாட்டு முறைகள் மாற்றம் காணவில்லை. நம்மவர்களிடையே ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகளும் ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளும் உள்ளன.

இவ்வாறான தெய்வ வழிபாட்டு முறையில் ஆகமம் சாராத வழிபாட்டு முறைக்கென்று பொதுவான இலக்கணங்களோ, வரைமுறைகளோ கிடையாது. இவை கிராமத்து மக்களால் நம்பிக்கையுடன் வழிபடப்பட்டு வருகின்ற தெய்வங்களாகும். இதனை சிறு தெய்வ வழிபாடு என்றும் அழைத்துக்கொள்வதுண்டு. பெருந்தெய்வ வழிபாட்டு முறைகளைப் போல அல்லாமல் மாறுபட்ட வழிபாட்டு முறைகளை உள்ளடக்குகின்றது.

அனைத்து பகுதிகளிலும் வாழ்பவர்களிடையிலும், ஏன் உயர்நிலையில் உள்ளவர்களிடத்திலும் கூட தமக்கு நம்பிக்கை தரும் தெய்வ வழிபாட்டினை செய்யாது விட்டால் தமது காரியங்கள் இனிதே நிறைவேறாது என்ற நிலையில் பல வகையான வழிபாட்டு முறைகளையும், நேத்திகளையும் செய்கின்றார்கள்.

அந்த வகையில் பெரியதம்பிரான் வழிபாடு நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளில் ஒன்றாக பார்க்கப்படுகின்றது. இவ் வழிபாடு யாழ்ப்பாணப் பிரதேசத்திலும், மட்டக்களப்பு பிரதேசத்திலுமே பரந்த வழிபாடாக காணப்படுகின்றது. மட்டக்களப்பின் வடக்கிலும், தெற்கிலும் அதாவது வடக்கில் குடியிருப்பு, வந்தாறுமுலை, கொம்மாந்துறை, சிற்ற}ண்டி, கோட்டா முனை முதலான இடங்களிலும் பெரியதம்பிரான் ஆலயங்கள் உள்ளதாக கூறப்படுகின்றது.

அதே யாழ்பாணத்தில் புங்குடுதீவு கிழக்கில் ஸ்ரீ நாகதம்பிரான் கோவிலினையே பெரியதம்பிரான்; கோவில் என அழைக்கின்றனர். வடக்கில் 15பெரியதம்பிரான் கோவில்கள் பற்றிய பதிவுகள் இணைய வலைத்தளங்களில் காணப்படுகின்றன. அந்தவகையில் நாவற்குழி பெரியதம்பிரான் கோவில், சுழிபுரம் பெரியதம்பிரான் கோவில், இடைக்காடு ஸ்ரீ பெரியதம்பிரான் கோவில், மல்லாகம்- நீலியம்பனை பெரியதம்பிரான் கோவில், வதரி- அல்வாய் தெற்கு பெரியதம்பிரான் கோவில், முகமாலை பெரியதம்பிரான் கோவில், நாகர் கோவில் பெரியதம்பிரான் கோவில், கந்தரோடை பெரியதம்பிரான் கோவில், அளவெட்டி பெரியதம்பிரான் கோவில், மறவன் புலோ-நித்தர் புலம் பெரியதம்பிரான், பொலிகண்டி பெரியதம்பிரான் தும்பளை மேற்கு பெரியதம்பிரான், நீர்வேலி பெரியதம்பிரான் (கோவில் குளம்) மற்றும் ஏழாலை பெரியதம்பிரான் போன்ற கோவில்களினை பற்றிய பதிவுகளை காணக்கிடைக்கின்றது.

20 வருடங்களுக்கு மேலாக யாழ். ஏழாலை பெரியதம்பிரான் கோவிலின் பூசகராக இருப்பவர் பெரியதம்பிரான் பூஜை வழிபாடு, சடங்குகள், நேத்தி முறைகள் பற்றி கூறுகையில்,


பெரியதம்பிரான் ஆலயங்கள் பெரும்பாலும் கொட்டில்கள், பந்தல்கள், சிறிய கட்டிடங்களாகத்தான் அமைந்து காணப்படும். கோவில்களில் பரிபால தேவர்களுக்கு பீடங்கள் இருப்பதில்லை. விஷேட தினங்களில் மாத்திரமே தேவைக்கேற்ப பந்தல்கள் அமைக்கப்படும். கட்டிடங்களாக அமைந்த சில பெரியதம்பிரான் கோவில்களில் பரிபால தேவர்களுக்கு என்று பீடங்கள் உள்ளன. அந்தவகையில் ஏழாலை பெரியதம்பிரான் கோவிலுக்கென்றும் கட்டிட சூழல் உள்ளது.

இவ்வாலயம் நான்கு புறமும் வயல்வெளிகள், குளம். வருடக்கணக்காக வளர்ந்து நிற்கும் மரங்கள் என்று ஆலயம் சுற்றிலும் ரம்மியமாக அமைந்து காணப்படும். பெரியதம்பிரான் கோவில்களில் படிமமுறையில் அமைந்த விக்கிரகங்கள் இருப்பதில்லை. சில ஆலயங்களில் சூலமும், சில ஆலயங்களில் உருவங்கள் அற்றும் இருக்கின்றன. ஆனால் இங்கு பாம்பு வடிவ உருவச்சிலைகளுக்கே பூஜை, அபிஷேகங்கயை செய்கின்றோம்.

பெரியதம்பிரான் ஆலயத்தின் பரிவார தேவர்களாக வீரபத்திரர், கட்டிடமாரி, முதலிமார், நரசிம்மர், காளி, பேய்ச்சியம்மன், நாக கண்ணி, நாகதம்பிரான், வதனமார், முருகையன், வைரவர் முதலான தெய்வங்கள் அமைந்து காணப்படும். இங்கு ஆலய பரிவார தெய்வமாக வைரவரிற்கென்று பீடம் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெரிய தம்பிரான் ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் பற்றி கூறும் போது,






இவ்வாலயத்தில் விஷேசத்திற்குரிய நாளாக கருதப்படும் ஒவ்வொரு புதன் கிழமையும் அதிகளவிலான பக்தர்கள் வருகை தருவார்கள். வெளியூரில் இருந்து கூட பக்தர்கள் வருவதனை அவதானிக்க முடியும். அன்றைய தினத்தில் பூஜைகள், அபிஷேகங்கள் மற்றும் பார்வை பார்த்தல் நிகழ்வுகள் இடம்பெறும். மந்திரங்கள் எதுவும் கூறாமல் மௌன பூஜையே நடைபெறுவதுண்டு.

இங்கு கட்டளை கேட்டு பொங்கல் பொங்கும் முறையும்; காணப்படுகின்றது. தற்போதைய காலத்திலும் கூட பறைமேளம் அடித்து சாடியடி என அழைக்கப்படும் இடத்திலிருந்து மடைப்பண்டம் எடுக்கும் முறை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது வளந்து பொங்கல் என அழைக்கப்படும் பொங்களுக்குரிய பொருட்களும் கூடவே எடுத்துச் செல்லப்படும். சாடியடியில் மேளக்கச்சேரி, நடனங்கள் மற்றும் வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறுவதுண்டு. மடைப்பண்டம் எடுக்கும் முறை போலவே மடை பரவும் முறையும் இன்றுவரை காணப்படுகின்றது.

மடை பரவும் முறையில் அதிகளவான பழங்கள், பலகாரம் போன்றவற்றை தெய்வத்திற்கு படைத்து வழிபடுவார்கள். என்ன தான் காலமற்றதினால் வழிபாட்டு முறைகள் மாற்றம் பெற்றாலும் நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகள் இன்றும் சில கிராமங்களில் நிலைத்து நிற்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.





ராஜஸ்தான்

# 2 இதயங்கள், 4 கைகளோடு பிறந்த அதிசயக் குழந்தை

ராஜஸ்தான் மாநிலம், ரத்தங்கத்தில் உள்ள தனியார் வைத்திய சாலையில் 2 இதயங்கள், 4 கைகள் மற்றும் கால்களுடன் கடந்த 5 ஆம் திகதி அதியசக் குழந்தையொன்று பிறந்துள்ளது.

19 வயதான பெண்ணுக்கே குறித்த குழந்தை



பிறந்துள்ளதாகவும் எனினும் அக்குழந்தை பிறந்து 20 நிமிடங்களில் உயிரிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கையில் ” இப்பெண்ணுக்கு சுகப்பிரசவம் செய்வது மிகவும் சிரமமாக இருந்தது. எனினும் மிகுந்த போராட்டத்துக்கு மத்தியில் சத்திரசிகிச்சை செய்து அவரது உயிரைக் காப்பாற்றியுள்ளோம்” எனத் தெரிவித்துள்ளனர்.

மராட்டியம்

## சாகசம் காட்டிய இளைஞர்கள்: யுவதி உயிரிழப்பு

மராட்டிய மாநிலத்தில் இளைஞர்கள் செய்த மோட்டார் சைக்கிள் சாகசத்தால் யுவதியொருவர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மராட்டிய மாநிலம், புனே நகரில் சமூக ஊடகங்களில் பிரபலம் அடைவதற்காக, இளைஞர்கள் இருவர் வீதியில் மோட்டார் சைக்கிள் சாகசம் புரிந்து அதனை வீடியோவாக எடுத்துள்ளனர்.

இதன்போது குறித்த வீதியில் நடந்து சென்ற இளம் யுவதியொருவர் மீது குறித்த இளைஞர்களின் மோட்டார் சைக்கிள் எதிர்பாராத விதமாக மோதியுள்ளது.

இவ்விபத்தில் ‘பெரோஸ் பதான்‘ என்ற குறித்த யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற இரு இளைஞர்களையும் கைதுசெய்துள்ள பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பெங்களூர்

## காதலியின் 7 மாதக் கருவைக் கலைத்த கொடூரன்

பெங்களூரைச் சேர்ந்தவர் சாகர். 30 வயதான இவர் கணினி பழுது பார்க்கும் வேலை செய்து வந்துள்ளார்.



இந்நிலையில் அவரிடம் கணினி பழுதுபார்க்க வந்த யுவதியொருவருடன் சாகர் நீண்டகாலமாக நட்புடன் பழகி வந்துள்ளார். இவர்களது பழக்கம் நாளடைவில் காதலாக மாறியுள்ளது.

இதனையடுத்து திருமணம் செய்து கொள்வதாகக் கூறி சாகர் அப்பெண்ணுடன் உல்லாசம் அனுபவித்து வந்துள்ளார்.

மேலும் சில நேரங்களில் சாகர், அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி பலாத்காரமும் செய்துவந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்7 மாத கர்ப்பிணி ஆகவே, சாகர் அக்கருவைக் கலைக்குமாறு கட்டாயப்படுத்தி வந்துள்ளார்.

எனினும் இதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில் ஆத்திரமடைந்த சாகர், அவரை பிடித்து வலுக்கட்டாயமாக மாத்திரை கொடுத்து, கருக்கலைப்பு செய்துவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட அப்பெண் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ள நிலையில், தலைமறைவாகியுள்ள சாகரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

# ஆப்கானிஸ்தானுக்கு முதலிடம்

பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் முதலிடத்தில் உள்ளதாக, ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகளைத் தலிபான் அரசு விதித்து வருகின்றது.

அதிலும் குறிப்பாக பெண்கள் ஆண்களின் துணையின்றி வெளியே செல்வதற்கும், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பூங்காவுக்குச்






செல்வதற்கும், உயர் கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிப்பான் அரசு தடை விதித்துள்ளது.

அதுமட்டுமல்லாது கடந்தாண்டு டிசெம்பர் மாதம், மறு அறிவிப்பு வரும் வரை சிறுமிகள் 6ஆம் தரத்திற்கு மேல் படிக்கக் கூடாது எனவும் உத்தரவிட்டிருந்தமை உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்து.

உலகளவில் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டுவரும் நிலையில் பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் முதலிடத்தில் உள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் கணவரின் கொடுமை தாங்காமல் விவாகரத்து பெற்ற பெண்களை, மீண்டும் முன்னாள் கணவருடனேயே வாழ்க்கை நடத்துமாறு தலிபான்கள் வற்புறுத்தி வருகின்றனர் எனவும், இதனால் பல பெண்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனவும் ஐ.நா கவலை தெரிவித்துள்ளது.

சீனா

## 53 பேரின் உயிரைப் பறித்த சுரங்க விபத்து



சீனாவின் மங்கோலியா பிராந்தியத்தில் உள்ள அல்க்சா லெஃப்ட்டில் திறந்தவெளி நிலக்கரி சுரங்கத்தில் கடந்த 22ஆம் திகதி நிகழ்ந்த விபத்தில் 53 பேர் உயிரிழந்திருக்கலாம் என சீன அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

குறித்த விபத்தில் சிக்கியவர்களைத் தேடும் பணி 2 வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், 53 பேரை மீட்க முடியாததால் அவர்கள் இறந்திருக்கலாம் என அறிவித்துள்ள சீனா, மீட்புப்பணிகளையும் முடித்துக் கொள்வதாக அறிவித்துள்ளது.

தென்கொரியா

## 1000 நாய்களைக் கொலை செய்த நபர்
### தென்கொரியாவில் பரபரப்பு

தென்கொரியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாய்களை நபர் ஒருவர் பட்டினி போட்டுக் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ஜோங்ஜி மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர், தனது வளர்ப்பு நாயைக் காணவில்லை எனப் பொலிஸாரிடம் புகாரளித்துள்ளார்.

இப்புகாரினையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் , அதே பகுதியைச் சேர்ந்த 60 வயது மதிக்கத்தக்க நபரின் வீட்டில் குவியல் குவியலாக நாய்களின் சடலங்கள் இருப்பதை கண்டுபொலிஸார் அதிர்ச்சி அடைந்தனர்.

இதனையடுத்து



பொலிஸாரின் விசாரணையில்” குறித்த நபர் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட நாய்களை எடுத்துவந்து உணவளிக்காமல் கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்படும் நாய்கள், கருத்தரிக்க முடியாத வயதை அடையும்போது, பண்ணை உரிமையாளர்கள் அவற்றைக் கொலை செய்யும் பொறுப்பை அந்த நபரிடம் ஒப்படைத்ததாகவும், அதற்காக ஒரு நாய்க்கு 800 ரூபாய் வீதம் கொடுத்ததாகவும் தெரியவந்துள்ளது.

லாஸ் ஏஞ்சல்ஸ்:

# உக்ரேனின் மார்டா கோஸ்ட்யுக் சாம்பியன்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஆஸ்டின் நகரில் மகளிருக்கான ஏடிஎக்ஸ் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் 52-ம் நிலை வீராங்கனையான உக்ரேனின் மார்டா கோஸ்ட்யுக், 66-ம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் வர்வரா கிரச்சேவாவை எதிர்த்து விளையாடினார். ஒரு மணி நேரம் 31 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 20 வயதான மார்டா கோஸ்ட்யுக் 6-3, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

சர்வதேச டென்னிஸ் அரங்கில் மார்டா கோஸ்ட்யுக் வெல்லும் முதல் பட்டம் இதுவாகும். வர்வரா கிரச்சேவாவை வீழ்த்தியதும் டென்னிஸ் களத்தில் கண்ணீர் விட்டு அழுதார்



மார்டா கோஸ்ட்யுக். போட்டி முடிவடைந்ததும் பரஸ்பரமாக வீராங்கனைகள் கைகுலுக்கிக் கொள்வது வழக்கம். ஆனால் மார்டா கோஸ்ட்யுக், வர்வரா கிரச்சேவாவுடன் கைகுலுக்காமல் விலகிச் சென்றார்.

மார்டா கோஸ்ட்யுக் கூறும்போது, “தற்போது நாங்கள் இருக்கும் நிலையில் இந்த பட்டத்தை வென்றதை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதுகிறேன். இந்த கோப்பையை உக்ரேனுக்கும், களத்தில் போராடி இறக்கும் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்கிறேன்” என்றார்.




மும்பை,

## பும்ராவுக்கு ஆபரேஷன் வெற்றி

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ராவுக்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 2-வது ஒருநாள் போட்டியின் போது முதுகுப் பகுதியில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக லேசான எலும்பு முறிவு ஏற்பட்டதால் எஞ்சிய போட்டி தொடரில் இருந்து விலகினார். மற்றும் 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியைத் தவறவிட்டார்.

அவரது காயத்துக்கு நிரந்தர தீர்வு காண சத்திர சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம் என்று தேசிய கிரிக்கெட் அகாடமியின் மருத்துவ குழுவினர் பரிந்துரை செய்தனர்.

இதையடுத்து நியூசிலாந்தின் கிறைஸ்ட் சர்ச் நகரில் உள்ள ஆஸ்பத்திரியில் கடந்த திங்கட்கிழமை பும்ராவுக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த மாதம் இறுதி வரை நியூசிலாந்தில் தங்கி சிகிச்சை பெறும் பும்ரா ஆகஸ்டு மாதம் முதல் பயிற்சியை தொடங்க திட்டமிடப்பட்டு இருக்கிறது.



## கராத்தே தகுதி காணும் சுற்றுப் போட்டி

■ எம்.எஸ்.எம். நூர்தீன்

மட்டக்களப்பில்) இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் உள்ள அரங்கில் கராத்தே தகுதி காணும் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை (04 இடம் பெற்றது.

எஸ்கிரீம் சோட்டோக்கன் கராத்தே டூ அகாடமி கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த தகுதி காணும் தரப்பட்டியல் நிகழ்வானது கழகத்தின் தலைவர் கந்தசாமி மதன்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சோமசுந்தரம் சுகிர்தன் (கருப்பு நிற பட்டி 3rd dan) கலந்து கொண்டு மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் கழகத்தின் பயிற்றுவிப்பாளர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிறந்த மாணவர் ஒருவர் உட்பட சுமார் 30 மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஓசைப் பந்து
### கிரிக்கெட் சுற்றுப் போட்டி

மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் சிநேகபூர்வ ஓசைப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12) மட்டு. விபுலாநந்தா மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக அதன் செயலாளர்கே.லவக்குமார் தெரிவித்தார்.

குறித்தசங்கத்தின்தலைவர்தலைமையில்இடம்பெறவுள்ளஇச்சுற்றுப் போட்டியில், கொழும்புரத்மலானவிளையாட்டுக்கழகத்துடன்மட்டக்களப்புஉதயம்விழிப்புலனற்றோர்சங்கக்கழகம்மோதவுள்ளது. இப்போட்டி காலை9மணிக்குஆரம்பமாகிமாலை 3மணிவரைஇடம்பெறவுள்ளது.

இப்போட்டிக்குபிரதமவிருந்தினராகிழக்குமாகாணபொதுச்சேவைகள்ஆணைக்குழுவின்செயலாளர்எம்.கோபாலரெத்தினம்கலந்துகொண்டுவெற்றி பெறும்அணிக்கானபணப்பரிசுமற்றும் கேடயங்களைவழங்கிவைக்கவுள்ளார்.

## சாரதா இல்லம் சாம்பியன்



■ க.விஜயரெத்தினம்

கல்லடி விவேகானந்தா மகளிர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் சாரதா இல்லம் 693 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைத் தட்டிக்கொண்டதுடன் சம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது.

கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி.நவகீதா தர்மசீலன் தலைமையில் சனிக்கிழமை (4) நடைபெற்றது.

இவ் விளையாட்டுப் போட்டியில், ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜூம், பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமாரும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஹரிகரராஜ், மட்டக்களப்பு மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.



ரவிச்சந்திரா, உடற்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் கே.ரவி ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டார்கள்.

இதன்போது பல திறனாய்வு விளையாட்டுக்கள் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மூன்று இல்லங்களுக்கிடையில் நடாத்தப்பட்டது. இத்திறனாய்வு விளையாட்டு போட்டியில் சாரதா இல்லம் 693 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தட்டிக்கொண்டதுடன் சம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது.

நிவேதிதா இல்லம் 674 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், அபவாமினி இல்லம் 597 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நினைவுச்சின்னமும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 10 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.